Written by Administrator
Thursday, 16 July 2009 10:37 -

□□□□□□□ **16.07.2009**

மாசுக்கட்டுப்பாடு விழிப்புணர்வு நிகழ்ச்சி வானொலியில் தொடருமா?

சென்னை, ஜூலை 15: மாசுக்கட்டுப்பாடு குறித்து அகில இந்திய வானொலியில் நடத்தப்பட்டு வந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தொடரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் சுற்றுச்சூழல் மாசு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. வாகனங்களில் இருந்து வெளியாகும் புகை, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளால் காற்று நீர் ஆகியன அதிக அளவில் மாசு ஏற்படுகிறது.

மாசு கட்டுப்பாடு குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டாலும் அகில இந்திய வானொலி மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கடந்த 2002 முதல் நடத்தி வந்தது.

நாடகம், பாடல், கவிதை நாட்டுப்புறப் பாட்டு, குன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்பில் ஆலோசனைகள் ஆகிய வடிவில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் இரவும் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிகழ்ச்சிகள் 2009 மார்ச் மாதம் முதல் திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது.

சென்னையில் தற்போதைய நிலவரப்படி காற்றில் நுரையீரலுக்கு அளவுள்ள பிரத்யேக நுண் துகள்களின் அளவு ஒரு கனமீட்டருக்கு 104 மைக்ரோ கிராம் உள்ளது. ஆனால் அதிகபட்சம் 100 மைக்ரோ கிராம்தான் இருக்க வேண்டும். இதனால் நுரையீரல் மற்றும் ஆஸ்துமா நோய் அபாயம் சென்னையில் உள்ளது.

தமிழகம் முழுவதும் இத்தகைய நிகழ்ச்சி குறிப்பாக வானொலியில் நடத்தப்பட்டு வந்த நிகழ்ச்சிகளைத் தொடர வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாநகர பஸ்களிலும் விளம்பரம் தீக்கம்... மாநகர பஸ்களில் வங்கிகளின் நிதி உதவியுடன் மாசுக்கட்டுப்பாடு விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள் 2006 -2008 ஆண்டுகளில் இடம்பெறிருந்தன. இந்த விளம்பரங்களும் கடந்த ஓராண்டாக நிறுத்தப்பட்டுவிட்டன. இதற்கான நிதியை வங்கிகள் தர முன்வந்தும் இதை நிக்குவதற்கான காரணம் என்ன? என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.